சமூகப்பாதுகாப்புத்துறை

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு – விழுப்புரம்

பத்திரிக்கை செய்தி

2015-ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் நலக்குழுக்களுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குழந்தைகள் நலக்குழுவிற்கு ஒரு பெண் உட்பட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர்.

குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவர் அல்லது குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூக பணி அல்லது சமூகவியல் அல்லது மனித மேம்பாடு ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்ற தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் நியமனம் செய்யப்படும் போது 35 வயதுக்கு குறையாதவராகவும், 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு குழுவில் அதிகபட்சமாக ஒரு நபர் இருமுறை பதவி வகிக்க இயலாது.

இதற்கான விண்ணப்படிவத்தை விழுப்புரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இப்பதவிக்கு தகுதியான நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளி நகலுடன், இச்செய்தி வெளியிட்ட 15 நாட்களுக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கபட வேண்டிய முகவரி:-

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
எண்.156,சாரதாம்பாள் வீதி,
நித்தியானந்தம் நகர்,
வழுதரெட்டி,
விழுப்புரம்.
தொலைப்பேசிஎண்: 04146-290609

மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம்.

B. Gobila 23.7.21

2/2